செ.வெ.எண்: 1011 21.11.08

# புதுக்கோட்டை மீனவர்களை மீட்பதற்கான முயற்சி.

## தமிழக அரசு செய்தி வெளியீடு.

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் அருகே நடுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 22 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கி முனையில் சிறை பிடித்துச் சென்றது குறித்து உடனடியாக அவர்களை மீட்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட முதலமைச்சர் கலைஞர், மத்திய வெளி உறவுத் துறை இணை அமைச்சர் திரு. அகமது அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, தமிழக மீனவர்களை மீட்பது குறித்து மத்திய அரசு உடனடி நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமென்று வலி யுறுத்தியிருந்தார். அதன் தொடர்ச்சியாக இன்று (21–11–2008) காலையில் மத்திய அமைச்சர் அகமது அவர்களை தமிழக முதல்வர், கலைஞர் அவர்கள் தொடர்பு கொண்டு பேசிய போது – நமது மீனவர்கள் இலங்கைக் கடலில் ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரையிலே சென்று மீன் பிடித்ததால், இலங்கை ராணுவத்திற்கு சந்தேகம் ஏற்பட்டு அவர்களைக் கைது செய்து நீதி மன்றத்தில் ஒப்படைத்திருப்பதாகவும், ஓரிரு நாட்களில் அவர்களை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதாகவும் தகவல் தெரிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.